செய்திக் குறிப்பு எண்: 028/112023 நாள்: 3/11/2023

**செய்திக் குறிப்பு**

# சிறார் திரைப்பட விழா போட்டிகளில் வென்று ஜப்பான் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்கள்

சென்னை - நவ 03,

தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மாநில அளவிலான சிறார் திரைப்படப் போட்டிகளில் வென்று ஜப்பான் செல்கிறார்கள்.

தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் ஆளுமைத் திறனை மேம்படுத்துவதற்கென பல்வேறு திட்டங்களை பள்ளிக் கல்வித் துறை செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக மாதந்தோறும் சிறார் திரைப்படங்கள் பள்ளிகள்தோறும் திரையிடப்பட்டு வருகின்றன. 2022 ஆம் தொடங்கப்பட்ட இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பள்ளி அளவில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு திரையிடல் நடந்து முடிந்தபின்னர், திரைப்படம் குறித்து சிறந்த விமர்சனம் எழுதுபவர்கள், அது குறித்து விமர்சன உரையாற்றுவோர், ஒரு காட்சியை நாடகமாக நடித்துக் காட்டியோர், படத்திற்கான சுவரொட்டிகள் உருவாக்கியவர்கள் என சிறந்த பங்களிப்பு செய்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் வட்டார அளவிலான போட்டிகளுக்கு அனுப்பப்பட்டனர். வட்டார அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பின்னர் மாவட்ட அளவிலான போட்டிகளிலும் வென்ற 152 மாணவர்கள் 2022-23 ஆம் கல்வியாண்டில் சென்னையில் நடந்த மாநில அளவிலான சிறார் திரைப்பட விழாவில் பங்கேற்றனர்.

மாநில அளவிலான பயிலரங்கத்தில் பங்கேற்று மாணவர்கள் குறும்படங்கள் தயாரித்தனர். அவற்றுள் சிறந்த படங்களை உருவாக்கியவர்களில் கதை, ஒளிப்பதிவு, இயக்கம், நடிப்பு என பல்வேறு தளங்களில் செயல்பட்ட 25 மாணவர்கள் ஜப்பான் நாட்டுக்கு சுற்றுலா செல்வதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்த மாணவர்கள் நவம்பர் 3 ஆம் தேதி இரவு புறப்பட்டுச் சென்று நவம்பர் 9 ஆம் தேதி அன்று சென்னை திரும்புகின்றனர்.

ஜப்பானில் உள்ள அருங்காட்சியகங்கள், பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், 2020 ஒலிம்பிக் போட்டிகள் நடந்த டோக்யோவின் விளையாட்டு அரங்கங்கள், விளையாட்டு மையங்கள், அறிவியல் அருங்காட்சியகங்கள், ஜப்பானின் முக்கிய்மான நினைவுச் சின்னங்கள் என பல இடங்களையும் இம்மாணவர்கள் சுற்றிப் பார்க்கின்றனர்.

ஜப்பான் புறப்படும் மாணவர்களை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சந்தித்து அவர்களுக்கான குளிர்கால உடைகளை அளித்து அவர்களோடு கலந்துரையாடினார். "வெளிநாட்டிற்கு கல்விச் சுற்றுலா சென்று வந்த பிறகு உங்கள் ஊரில், உங்கள் பள்ளியில் உள்ள சக மாணவர்களிடம் நீங்கள் பார்த்த இடங்களைப் பற்றியும் நீங்கள் வெளிநாடு சென்ற அனுபவங்களைப் பற்றியும் பகிர்ந்துகொள்ள வேண்டும். அந்த மாணவர்கள் அடுத்த ஆண்டு உங்களைப் போல் போட்டிகளில் பங்குபெற்று வெளிநாடு செல்ல வேண்டும்" என்று மாணவர்களிடையே உரையாற்றுகையில் தெரிவித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஜப்பான் சென்று மாணவர்களோடு அவர்களுடைய சுற்றுலாவில் இணைந்துகொள்கிறார்.

இவண்

இயக்குநர்

பள்ளிக் கல்வி